**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 34/2023 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.வின்ஸ் ஜெபராஜ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து பிளம்பிங் வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 2022ம் வருடம் என் வீட்டின் அருகே நின்றுக்கொண்டிருந்தபோது என்னை யாரோ அடித்துவிட்டார்கள். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் சந்தேகத்தின் அடிப்படையில் நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்படி சம்பவத்திற்கு பிறகு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது தவறு இல்லை என தெரிய வந்ததால் நாங்கள் ராசியாகி சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154–ன் கீழ் அனுமதிக்கிறது.**

**<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நானும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். **மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

2. கடந்த 06.12.2022ம் தேதி 16.45 மணிக்கு நான் என் வீட்டின் முன்பு நின்றுக்கொண்டிருந்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை தகாத வார்த்தையால் பேசி காயம் ஏற்படுத்தினார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் சமாதானமாகிவிட்டதால் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.